பத்திரிக்கை செய்தி

தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்ட மின் கட்டணத்தை குறைத்து மதிப்பீடு செய்துதர லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய கணக்கு மேற்பார்வையாளர், வருவாய் கிளை, நிர்வாக பொறியாளர் அலுவலகம், மின்சார வாரியம், வேளச்சேரி, சென்னை அவர்களுக்கு 1 ஆண்டு சிறை

புகார்தாரர் திரு.செந்தில்குமார், அண்ணாநகர், சென்னையில் வசித்து வருகிறார். புகார்தாரர் வேளச்சேரியில் காய்கறி மற்றும் பழக்கடையினை 2009ம் ஆண்டு வாடகைக்கு எடுத்து 2009 மற்றும் 2010ம் ஆண்டுகளில் கடையை புதுப்பித்துள்ளார். புதுப்பித்த கடையினை 24.01.2011ம் ஆண்டு திறந்துள்ளார். புகார்தாரர் கடந்த 24.02.2012 அன்று நிர்வாக பொறியாளர், செயல்பாடு மற்றும் பராமரிப்பு, மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மாண கழகம், அடையாறு பிரிவிலிருந்து 12/2009 முதல் 02/2011 வரையிலான காலத்திற்கு தணிக்கை குறுகிய பில் தொகையாக ரூ.8.04,979/- செலுத்துமாறு ஒரு கடிதம் பெற்றுள்ளார். இக்கடிதம் தொடர்பாக புகார்தாரர் திரு.சேதுராமன், கணக்கு மேற்பார்வையாளர், வருவாய் கிளை, நிர்வாக பொறியாளர் அலுவலகம், மின்சார வாரியம், வேளச்சேரி, சென்னை அவர்களிடம் தொடர்பு கொண்டு விபரம் கேட்டுள்ளார். திரு.சேதுராமன் அவர்கள் மேற்படி பில் தொகையை மறுமதிப்பீடு செய்து ரூ.1,50,000/- ஆக குறைத்து தருவாதகவும், அவ்வாறு பில் தொகையினை குறைத்து மதிப்பீடு செய்து தருவதற்கு தனக்கு ரூ.2,50,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். மேலும் ரூ.50,000/- முன்பணமாக கொடுக்குமாறு வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 02.08.2012 மேற்கொள்ளப்பட்டு திரு.சேதுராமன் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.50,000/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது சிறப்பு நீதிமன்றம், சென்னையில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் 17.11.2025 அன்று திரு.சேதுராமன், கணக்கு மேற்பார்வையாளர், வருவாய் கிளை, நிர்வாக பொறியாளர் அலுவலகம், மின்சார வாரியம், வேளச்சேரி, சென்னை அவர்களுக்கு 1 ஆண்டு சிறை தண்டனையும் ரூ.2,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.